# உடல்நலம் பற்றிய தகவல்கள்

# தனியுரிமை மெய்த்தகவல் தாள் (PRIVACY FACT SHEET)

STARTTS

Tamil | தமிழ்

**தனியுரிமைச் சட்டத்தைப் பின்பற்றி, உங்கள் தனிப்பட்ட உடல்நலம் பற்றிய தகவல்களைக் கையாள STARTTS உறுதிபூண்டுள்ளது.**

## உங்கள் தகவல்களைச் சேகரித்தல்

- முடிந்தவரை, நாங்கள் உங்களிடமிருந்து நேரடியாகத் தகவல்களைச் சேகரிக்கிறோம்.
- இது சாத்தியமில்லையென்றாலோ அல்லது அவசரகாலச் சூழ்நிலையிலோ, ஒரு குடும்ப உறுப்பினர், நண்பர், பராமரிப்பாளர் அல்லது உங்களுக்குப் பொருத்தமான பராமரிப்பை வழங்க எங்களுக்கு உதவக்கூடிய மற்றொரு நபர் ஆகியோரிடமிருந்தும் நாங்கள் தகவல்களைச் சேகரிக்கவேண்டியதிருக்கலாம்.

## சேகரிக்கப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு

- பாதுகாப்பான, கணினிமயமாக்கப்பட்ட தரவுத்தளத்தின் ஒரு பகுதியாக இருக்கும் மின்னணுச் சுகாதாரப் பதிவேட்டில் (electronic health record), உங்கள் தகவல்களை STARTTS வைத்திருக்கிறது.
- 2016-ஆம் ஆண்டுக்கு முன், நீங்கள் STARTTS -இல் கலந்து கொண்டிருந்தால், நாங்கள் காகித அடிப்படையிலான சுகாதாரப் பதிவேட்டிலும் தகவல்களை வைத்திருக்கலாம்.
- அங்கீகரிக்கப்படாத அணுகல், இழப்பு அல்லது பிற முறைகேடுகளிலிருந்து உங்கள் தகவல்களைப் பாதுகாக்க, அனைத்து வடிவமைப்புகளிலும் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பாகச் சேமிப்பது தொடர்பான கடுமையான விதிகள் மற்றும் கொள்கைகளை நாங்கள் பின்பற்றுகிறோம்.

## தகவல்களைப் பயன்படுத்தல் அல்லது வெளிப்படுத்தல்

- பின்வரும் காரணங்களுக்காக STARTTS உங்கள் தகவலைப் பயன்படுத்தலாம் அல்லது வெளிப்படுத்தலாம்:
  - பின்தொடர் (follow-up) சந்திப்பு ஏற்பாடுகள் தொடர்பாக உங்களைத் தொடர்பு கொள்ள
  - உங்கள் பராமரிப்பில் நேரடியாக ஈடுபட்டுள்ள மற்ற சுகாதார நிபுணர்களுக்குத் தெரிவிக்க
  - எங்கள் சேவைகளை மதிப்பீடு செய்து மேம்படுத்துவதற்கு உதவும் வகையில், எங்களிடமிருந்து நீங்கள் பெற்ற சேவைகள் பற்றிய பின்னூட்டத்துக்காக (feedback) உங்களைத் தொடர்பு கொள்ள
  - மாணவர்கள் மற்றும் பிற ஊழியர்களின் பயிற்சி நோக்கங்களுக்காக
  - அவசரகால நிலைமை போன்ற, ஒருவரின் வாழ்க்கை, உடல்நலம் அல்லது நல்வாழ்வுக்குக் கடுமையான மற்றும் உடனடி அச்சுறுத்தலைத் தடுக்க உதவிடுவதற்காக, மற்ற சுகாதாரச் சேவைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர்களுக்குத் தெரிவிக்க
  - STARTTS அல்லது எங்கள் சுகாதார நிபுணர்களில் ஒருவருக்கு எதிரான புகார், சட்ட நடவடிக்கை, அல்லது உரிமைக் கோரல் ஆகியவற்றை நிர்வகிக்கக்கூடிய உரிமைக் கோரல்களுக்கான மேலாளர்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புள்ள நபர்களுக்குத் தெரிவிக்க
  - நிதியளித்தல், திட்டமிடல், பாதுகாப்பு மற்றும் தர மேம்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட, STARTTS -இன் செயற்பாடு மற்றும் எங்கள் வாடிக்கையாளர்களை நடத்தும் முறை ஆகியவற்றுடன் தொடர்புடைய நோக்கங்களுக்காக
- உங்களைப் பற்றிய குறிப்பிட்ட சில தகவல்களை நாங்கள் சேகரிப்பதையோ, பயன்படுத்துவதையோ அல்லது வெளியிடுவதையோ நீங்கள் விரும்பவில்லை என்றால், நீங்கள் அது பற்றி எங்களிடம் சொல்ல வேண்டும், அத்துடன், இதனால் உங்கள் பராமரிப்புக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தும் நாம் கலந்தாலோசிப்போம்.
- உங்கள் தனிப்பட்ட உடல்நலம் பற்றிய தகவல்களை STARTTS வெளிப்படுத்துவதை சட்டமும் அனுமதியளிக்கிறது அல்லது வெளிப்படுத்துமாறு வேண்டுகிறது, எடுத்துக்காட்டாக:
  - மனித ஆராய்ச்சி மற்றும் நெறிமுறைக் குழுவால் (Human Research and Ethics Committee) அங்கீகரிக்கப்பட்ட, பொதுநல ஆராய்ச்சித் திட்டங்களுக்கான ஆராய்ச்சியாளர்களுக்கு
  - தாக்குதல் (assault), வீட்டு வன்முறை (domestic violence), குழந்தையைத் தகாத வழியில் பயன்படுத்தல் (child abuse), மற்றும் பல உள்ளிட்ட, ஒரு தீவிரக் குற்றம் தொடர்பான தகவல்களை நீங்கள் எங்களுக்கு வழங்கும் பட்சத்தில், மற்ற சுகாதார சேவைகள் அல்லது காவல்துறை போன்ற சட்டத்தைச் செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு
  - ஒரு குழந்தை அல்லது இளைய நபரின் பாதுகாப்பு, நல்வாழ்வு அல்லது நலன் தொடர்பான தகவல்களைப் பிற நிறுவனங்களுக்கு
  - உங்களைப் பற்றிய தகவல்கள், நீதிமன்றத்தில் ஆதாரமாகத் தேவைப்படும் பட்சத்தில், ஒரு நீதிமன்ற அழைப்பாணை (subpoena) அல்லது தேடல் ஆணைக்கு (search warrant) இணங்க, நீதிமன்றத்திற்கு அல்லது காவல்துறைக்கு

## தகவல் பெறுவதற்கான உரிமை

- சுகாதாரத் தகவல்களுக்கான, நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத் தனியுரிமைக் கையேடு (NSW Health Privacy Manual) மற்றும் சுகாதாரப் பதிவுகள் மற்றும் தகவல்கள் தனியுரிமைச் சட்டம் 2002 (HRIPA) -இன் படி, நீங்கள் உங்கள் உடல்நலம் பற்றிய தகவல்களை அணுகலாம். STARTTS -இல் உள்ள சுகாதாரத் தகவல் சேவை (HIS), உங்கள் STARTTS சுகாதாரப் பதிவுகளை உங்களுக்கு வழங்குகிறது.
- உங்களைப் பற்றி நாங்கள் வைத்திருக்கும் தகவல் தவறானது என்றோ அல்லது STARTTS தவறு செய்துவிட்டது என்றோ நீங்கள் நம்பினால், தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும், நாங்கள் அதை சரிசெய்வோம் அல்லது உங்கள் சுகாதாரப் பதிவேட்டில் ஒரு குறிப்பைச் சேர்ப்போம்.
- உங்கள் தனிப்பட்ட தகவலைக் கொடுப்பது, உங்களை அல்லது மற்றொரு நபரை மன ரீதியான அல்லது உடல் ரீதியான பாதிப்புக்கு ஆளாக்கும் என்ற பட்சத்தில், விதிவிலக்கான சூழ்நிலைகளில், அதை அணுகுவதை நாங்கள் நிராகரிக்கலாம்.

# எனது STARTTS சுகாதாரப் பதிவேட்டை (health record) நான் எவ்வாறு அணுகுவது?

<table>
<tr><th></th><th>வாடிக்கையாளர்</th><th>பிற தனிநபர்</th><th>வழக்கறிஞர் அல்லது காப்பீட்டு நிறுவனம்</th></tr>
<tr><td>பதிவேட்டின் நகல்கள்</td><td colspan="2">சுகாதாரப் பராமரிப்புப் பதிவேட்டை அணுகுவதற்கான விண்ணப்பப் படிவம் (Application for Access to Health Care Records form)</td><td rowspan="3">பின்வருவன உள்ளிட்ட, ஓர் எழுத்துபூர்வமான கோரிக்கை:<br>• வாடிக்கையாளரின் முழுப் பெயர்<br>• பிறந்த தேதி<br>• தேவைப்படும் பதிவுகளின் தேதி வரம்பு<br>• தேவைப்படும் பதிவுகள்/ தகவல்கள் பற்றிய குறிப்பிட்ட விவரங்கள்<br>• STARTTS ஆவணங்களை எங்கே அனுப்ப வேண்டும்</td></tr>
<tr><td>பதிவுகளைப் பார்வையிடல்</td><td colspan="2">சுகாதாரப் பராமரிப்புப் பதிவேட்டை அணுகுவதற்கான விண்ணப்பப் படிவம் (Application for Access to Health Care Records form)<br>• ஒரு சந்திப்பு ஏற்பாட்டுக்காக, HIS உங்களைத் தொடர்பு கொள்ளும்<br>• ஒரு HIS பிரதிநிதி உங்களுடன் உட்கார்ந்து, உங்கள் பதிவேடு தொடர்பான உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பார். ஆயினும், அந்த பிரதிநிதி எந்தவித உளவியல் கேள்விகளையும் விளக்க மாட்டார்.</td></tr>
<tr><td>வருகை அல்லது ஆதரவுக் கடிதம்</td><td colspan="2">வருகை அல்லது ஆதரவுக் கடிதத்துக்கான கோரிக்கை</td></tr>
<tr><td>அடையாள ஆவணம் தேவைப்படுகிறது<br>எடுத்துக்காட்டு:<br>கடவுச் சீட்டு (Passport),<br>ஓட்டுநர் உரிமம் (Drivers Licence),<br>குடிவரவு அட்டை (Immicard)</td><td>சொந்த அடையாள ஆவணம்</td><td>சொந்த அடையாள ஆவணம்<br>வாடிக்கையாளரின் அடையாள ஆவணம்</td><td>அடையாள ஆவணம் தேவையில்லை.</td></tr>
<tr><td rowspan="4">ஒப்புதல் (கோரிக்கை எழுப்பிய மூன்று மாதங்களுக்குள்ளான தேதியுடன்)</td><td colspan="2">வாடிக்கையாளர்</td><td>ஒப்புதல் தேவைப்படுகிறது</td></tr>
<tr><td colspan="2">வயது 16-க்கு மேல்</td><td>வாடிக்கையாளர்</td></tr>
<tr><td colspan="2">வயது 16-க்குக் கீழ்</td><td>பெற்றோர் அல்லது சட்டபூர்வப் பாதுகாவலர்</td></tr>
<tr><td colspan="2">இறந்தவர்</td><td>உயிலை நிறைவேற்றுபவர்</td></tr>
<tr><td rowspan="4">கட்டணங்கள்</td><td colspan="3">தஞ்சம் கோருவோர்களுக்குக் கட்டணம் இல்லை.<br>ஓய்வூதிய (Pensioner), சலுகை (Concession) அல்லது சுகாதாரப் பராமரிப்பு (Healthcare) அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கு 50 சதவீதம் தள்ளுபடி.<br>உங்கள் பதிவேடு, வருகை மற்றும் ஆதரவுக் கடிதங்களைப் பார்வையிடக் கட்டணம் இல்லை.<br>ஆவணங்களின் நகல்களை வெளியிடுவதற்கு முன், STARTTS கட்டாயம் பணத்தைப் பெற வேண்டும்</td></tr>
<tr><td colspan="2">பொருள்</td><td>செலவு</td></tr>
<tr><td colspan="2">விண்ணப்பக் கட்டணம்</td><td>$33.00</td></tr>
<tr><td colspan="2">கூடுதல் பக்கக் கட்டணங்கள் (80 பக்கங்களுக்கு மேற்பட்ட பதிவுகளுக்கு)</td><td>ஒரு பக்கத்துக்கு $0.40</td></tr>
<tr><td>காலக்கெடு</td><td colspan="3">• அதிகபட்சம் 21 வேலை நாட்கள்.<br>• உங்கள் கோரிக்கை அவசரமானதாக இருந்தால், உங்கள் கோரிக்கையில் நீங்கள் இதைக் குறிப்பிடலாம். சுகாதாரத் தகவல் சேவைகள், உங்கள் கோரிக்கைக்கு முன்னுரிமை அளிக்கும், ஆனால் STARTTS எந்த உத்தரவாதத்தையும் அளிக்க முடியாது என்பதைத் தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்.</td></tr>
</table>

## எங்களைத் தொடர்பு கொள்க

உங்கள் தனிப்பட்ட தகவல்களின் தனியுரிமை பற்றி ஏதேனும் கேள்விகள் அல்லது புகார்கள் இருந்தால், பின்வரும் வழிமுறைகள் மூலம் **சுகாதாரத் தகவல் சேவையுடன் (Health Information Service)** தொடர்பு கொள்ளத் தயங்க வேண்டாம்:

**தொலைபேசி:** (02) 9646 6700

**மின்னஞ்சல்:** STTS-HealthInformationService@health.nsw.gov.au

### குறிப்புதவிகள்

**சுகாதாரப் பதிவுகள் தகவல் தனியுரிமைச் சட்டம் 2002 (Health Records Information Privacy Act 2002)**
**சுகாதாரத் தகவல்களுக்கான, நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத் தனியுரிமைக் கையேடு (NSW Health Privacy Manual)**
**மற்றும் தனிப்பட்ட தகவல் பாதுகாப்புச் சட்டம் 1998 (Personal Information Protection Act 1998)**

பிற தனியுரிமைச் சட்டங்கள் மற்றும் தொடர்புடைய சட்டங்கள்

**சுகாதார நிர்வாகச் சட்டம் 1982 (Health Administration Act 1982)**
**மனநலச் சட்டம் 2007 (Mental Health Act 2007)**
**பொதுச் சுகாதாரச் சட்டம் 1991 (Public Health Act 1991)**
**காமன்வெல்த் தனியுரிமைச் சட்டம் 1988 (Commonwealth Privacy Act 1988)**
**அரசுத் தகவல் (பொது அணுகல்) சட்டம் 2009 (Government Information (Public Access) Act 2009)**
**மாநிலப் பதிவேடுகள் சட்டம் 1988 (State Records Act 1988)**
**குழந்தைகள் மற்றும் இளம் நபர்கள் (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 1998 (Children and Young Persons (Care and Protection) Act 1988)**